## சுருக்கம்

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை – கொரோனா (Covid-19) நோய்த்தொற்றை தடுக்க குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 144ன் கீழ் தடை உத்தரவு நீட்டித்தது – தனியார் மற்றும் அரசு பொது பேருந்து போக்குவரத்து சேவை 16–7–2020 முதல் 31–7–2020 வரை இயக்கப்படாத நாட்களுக்கு மாற்றுத்திறனாளி அரசுப் பணியாளர்கள் அலுவலக பணி மேற்கொள்வதிலிருந்து விலக்கு (Exemption) அளித்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத்திறனாளிகள் நலத் (அ.ந.மு) துறை

**அரசாணை (நிலை) எண். 11** | **நாள் 23.07.2020**

**சார்வரி, ஆடி–8,**

**திருவள்ளுவர் ஆண்டு, 2051**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண்.152, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள்.23.03.2020.
2. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் கடித ந.க. எண்.3/நிர்.2/2020, நாள். 24.03.2020.
3. அரசாணை (நிலை) எண்.2, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, நாள்.31.03.2020.
4. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் கடித ந.க. எண்.3/நிர்.2/2020, நாள். 15.04.2020.
5. அரசாணை (நிலை) எண்.3, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, நாள்.17.04.2020.
6. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் கடித ந.க. எண்.3/நிர்.2/2020, நாள். 03.05.2020.
7. அரசாணை (நிலை) எண்.4, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, நாள்.5.5.2020.
8. தலைமைச் செயலாளர், பொதுத்துறை கடிதம் எண் CSCR/130-216/2020, நாள் 17.05.2020.
9. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் கடித ந.க. எண்.3/நிர்.2/2020, நாள். 17.05.2020.
10. அரசாணை (நிலை) எண்.5, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, நாள்.21.5.2020.
11. அரசாணை (நிலை) எண். 262, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (டிஎம்–II) துறை, நாள். 31.5.2020.
12. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் கடித ந.க. எண்.3/நிர்.2/2020, நாள். 1.6.2020.
13. அரசாணை (நிலை) எண்.6, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, நாள்.3.6.2020.
14. அரசாணை (நிலை) எண். 324, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (டிஎம்–II) துறை, நாள். 30.6.2020.
15. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் கடித ந.க. எண்.3/நிர்.2/2020, நாள். 30.6.2020.

**மீள படிக்கப்பட்டது:**

16. அரசாணை (நிலை) எண்.7, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, நாள்.6.7.2020.
17. தமிழ்நாடு அரசு செய்தி வெளியீடு எண். 494, நாள்: 13.7.2020.
18. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் கடித ந.க. எண்.3/நிர்.2/2020, நாள்: 14.7.2020.

*****

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் கொரோனா தொற்று நோயினைத் தவிர்க்க அத்தியாவசிய பணிகளுக்கென மாற்றுத்திறனாளிகள் நலத்துறை உட்பட பல்வேறு துறைகள் பணியாற்றிடவேண்டும் என ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவது, நான்காவது, ஆறாவது, ஒன்பதாவது, பன்னிரன்டாவது மற்றும் பதினைந்தாவதாக படிக்கப்பட்ட கடிதங்களில் மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அவர்களின் கோரிக்கைகளை ஏற்று பல்வேறு துறைகளிலும் உள்ள மாற்றுத்திறனாளி அரசுப் பணியாளர்களின் உடல் குறைபாட்டையும், பாதுகாப்பையும் கருத்தில்கொண்டு, தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நாளான 24.3.2020 முதல் 15.7.2020 வரையிலான காலங்களுக்கு அவர்கள் தங்கள் அலுவலகத்தில் பணி மேற்கொள்வதிலிருந்து விலக்களித்து (Exemption) மேலே மூன்றாவது, ஐந்தாவது, ஏழாவது, பத்தாவது, பதிமூன்றாவது மற்றும் பதினாறாவதாக படிக்கப்பட்ட அரசாணைகளில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே பதினெட்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், அரசு செய்தியின்படி கொரோனா வைரஸ் நோய் தொற்றை தடுப்பதற்காக பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ், 16.7.2020 முதல் 31.7.2020 வரை தனியார் மற்றும் அரசு பொது பேருந்து போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளதால், மாற்றுத்திறனாளி அரசு பணியாளர்களின் உடல் குறைப்பாட்டினையும், பாதுகாப்பினையும் கருத்தில் கொண்டு 16.7.2020 முதல் 31.7.2020 வரையிலான நாட்களுக்கு மாநிலம் முழுவதும் உள்ள மாற்றுத்திறனாளி அரசு அலுவலக பணியாளர்கள், அலுவலகப் பணிகள் மேற்கொள்வதிலிருந்து விலக்களித்து (Exemption) ஆணை வழங்குமாறு அரசினை கோரியுள்ளார்.

4. மேலே பத்தி 3–ல் உள்ள மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, மாநிலம் முழுவதும் தனியார் மற்றும் அரசு பொது பேருந்து போக்குவரத்து சேவை 16.7.2020 முதல் 31.7.2020 வரை இயக்கப்படாது என்பதால், அரசு அலுவலகங்களில் பணிபுரிந்து வரும் மாற்றுத்திறனாளி பணியாளர்களின் உடல் குறைபாட்டையும், பாதுகாப்பையும் கருத்தில்கொண்டு, தனியார் மற்றும் அரசு பொது பேருந்து போக்குவரத்து சேவை இயக்கப்படாத 16–7–2020 முதல் 31–7–2020 வரையிலான நாட்களுக்கு மட்டும் அவர்கள் தங்கள் அலுவலகத்தில் பணி மேற்கொள்வதிலிருந்து விலக்களித்து (Exemption) அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க. சண்முகம்**
**அரசு தலைமைச் செயலாளர்**

பெறுநர்
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர்,
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரகம், சென்னை–5.

தலைமைச் செயலகத்திலுள்ள அனைத்துத் துறைகள்,
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
அனைத்து துறைத் தலைவர்கள்,
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9,
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம்) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9,
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

23/07/2020
பிரிவு அலுவலர்,
23.7.2020